# கருத்தரங்கம்

**02.12.2017**
சனிக்கிழமை மாலை 5.00 மணி

**இடம் :**

தக்கர் பாபா வித்யாலயா சமிதி
வெங்கட நாராயணா சாலை
தி. நகர், சென்னை

**தலைமை :**

வழக்கறிஞர் **சே.வாஞ்சிநாதன்**
மாநில ஒருங்கிணைப்பாளர்,
மக்கள் உரிமைப் பாதுகாப்பு மையம்

**உரையாற்றுவோர் :**

திரு. **அரங்கநாதன்,** தலைவர்
அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர் சங்கம்

வழக்கறிஞர் **சி.ராஜு**
மாநில ஒருங்கிணைப்பாளர்
மக்கள் அதிகாரம்

திரு. **சுருதிசாகர் யமுனன்**
பத்திரிக்கையாளர், scroll.in, New Delhi

தோழர் **மருதையன்**
பொதுச் செயலாளர்,
மக்கள் கலை இலக்கியக் கழகம்

# அனைத்து சாதியினரும் அர்ச்சகராக முடியாதா?

## தீர்ப்பு கூறுவது என்ன?

# இனி நாம் செய்ய வேண்டியது என்ன?

*அன்பார்ந்த நண்பர்களே,*

கேரள மாநிலம், திருவிதாங்கூர் தேவஸ்வம் போர்டு தனது கட்டுப்பாட்டில் உள்ள கோயில்களில் ஆறு தலித்துகள் உட்பட பார்ப்பனரல்லாத அர்ச்சகர்கள் 36 பேரை நியமனம் செய்திருப்பது அர்ச்சகர் பிரச்சனையில் மீண்டும் ஓர் விவாதத்தைக் கிளப்பியுள்ளது.

''சாதிப் பாகுபாடின்றி அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்க வேண்டும்'' என்ற கோரிக்கை முதன்முதலில் தந்தை பெரியாரால் எழுப்பப்பட்டு, அதன் தொடர்ச்சியாக திமுக அரசு, ''அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்கும் சட்டத்தைக்'' கொண்டு வந்தது. மதுரை சிவாச்சாரியார்கள் தொடுத்த வழக்கில் 1972 உச்ச நீதிமன்றத் தீர்ப்பினால் (சேசம்மாள் தீர்ப்பு) இச்சட்டம் முடக்கப்பட்டது. ''உச்ச நீதிமன்றம் நமது சாதி இழிவை பூதக்கண்ணாடி வைத்துப் பெருக்கிக் காட்டியிருக்கிறது'' என்பது 1972 தீர்ப்பு குறித்த பெரியாரின் கருத்து.

''சேசம்மாள் தீர்ப்பு அர்ச்சகர் நியமனத்தில் வாரிசுரிமை கோர முடியாது என்று கூறிவிட்டதால், இத்தீர்ப்பின் அடிப்படையிலேயே தமிழக அரசு பார்ப்பனரல்லாதவர்களை அர்ச்சகர்களாக நியமிக்க இயலும்'' என்றவொரு மாற்றுக் கருத்தும் பேசப்பட்டு வந்தது. ஆனால் அதன்பின் வந்த எந்த அரசும் சேசம்மாள் தீர்ப்பின் அடிப்படையில் பார்ப்பனரல்லாதோரை நியமனம் செய்யவில்லை. மாறாக கடந்த 40 ஆண்டுகளில் பார்ப்பன அர்ச்சகர்களின் வாரிசுகள்தான் நூற்றுக்கணக்கில் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

2006 ஆம் ஆண்டில் திமுக அரசு ஒரு அரசாணை மூலம், ஆகமப் பயிற்சிப் பள்ளி தொடங்கி, அதில் பயின்ற தகுதி வாய்ந்த எல்லா சாதிகளையும் சேர்ந்த மாணவர்களை அர்ச்சகர்களாக நியமிப்பதாக அறிவித்தது. இந்த அரசாணைக்கு உச்ச நீதிமன்றத்தில் தடை வாங்கிய, மதுரை மீனாட்சி கோயில் அர்ச்சகர்கள், பயிற்சி முடித்து சைவ, வைணவ தீட்சை பெற்ற 206 மாணவர்களை தெருவில் நிறுத்தினர். பாதிக்கப்பட்ட இந்த மாணவர்களை சங்கமாகத் திரட்டி, அவர்களை உச்ச நீதிமன்ற வழக்கில் இணைத்து வாதாடினோம். 2015-இல் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பும் வந்தது.

தீர்ப்பு கூறுவது என்ன? ''தங்களைத் தவிர மற்றவர்கள் சிலையைத் தொட்டால் தீட்டு என்று அர்ச்சகர்கள் கூறுவது தீண்டாமைக் குற்றம் ஆகாது'' என்று தீண்டாமையை நியாயப்படுத்தியது இந்தத் தீர்ப்பு. வேலைவாய்ப்பில் அனைவருக்கும் சம உரிமை என்பதையும் இத்தீர்ப்பு நிராகரித்து விட்டது.

''அரசியல் சட்டப்பிரிவு 16(5)இன் படி, குறிப்பிட்ட வகையறா வினர் பெற்றிருக்கும் மத உரிமையில், மற்றவர்கள் சம உரிமை கோர முடியாது'' என்றும் இத்தீர்ப்பு கூறுகிறது. தமிழக அரசு தீட்சை பெற்ற மாணவர்களில் ஒருவரை, ஒரு குறிப்பிட்ட கோயிலில் அர்ச்சகராக நியமனம் செய்யும்பட்சத் தில், அது ''மரபுக்கு எதிரானது'' என்று பார்ப்பன அர்ச்சகர்கள் கருதினால், அவர்கள் நீதிமன்றத்தை நாடலாம் என்றும் கூறு கிறது இத்தீர்ப்பு.

மேற்கூறிய காரணங்களினால் இத்தீர்ப்பு 1972 தீர்ப்பைக் காட்டிலும் பிற்போக்கானது என்பது எமது மதிப்பீடு. இத்தீர்ப்பு அர்ச்சக மாணவர்களுக்கு சாதகமானது என்று விளக்கப்படுத்து வோரும் இருக்கிறார்கள்.

''அர்ச்சக மாணவர்களைப் பணிநியமனம் செய்யக்கூடாது'' என்று இத்தீர்ப்பு வெளிப்படையாகத் தடை விதிக்கவில்லை. ''நியமனத்தில் மரபு மீறல் கூடாது'' என்று கூறுகிறது. எனவே இத்தீர்ப்பை விளக்கப்படுத்துவதில் கருத்து வேறுபாடு இருந்தாலும், ''206 மாணவர்களையும் பணி நியமனம் செய்'' என்ற கோரிக்கையை அரசிடம் முன்வைத்து நாம் அனைவரும் போராட வேண்டும்.

ஒருவேளை நியமிக்கப்பட்டால், அவர்களுடைய பணி நியமனத் துக்கு எதிராக மீண்டும் அர்ச்சகர்கள் நீதிமன்றம் செல்வார்கள். ''தமிழ் மக்களுக்கு சொந்தமான கோயில்களில் தமிழையும் தமிழனையும் தீண்டத்தகாவர்கள் என்று கூறும் சாதித்திமிர் பிடித்த இந்தக் கூட்டமும், அதற்குத் துணை நிற்கும் சட்டமும் நமது எதிரிகள்'' என்று தமிழ்ச் சமூகத்தைத் தட்டி எழுப்பும் வண் ணம், நாமும் போராட்டத்தைத் தொடங்க வேண்டும்.

•♦•

அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்க வேண்டும் என்பதற் கான போராட்டம், ஒரு சுயமரியாதைப் போராட்டம். பெரும் பான்மையான மக்கட் பிரிவினர் பிறப்பாலேயே இழிவானவர்கள் என்று கூறும் பார்ப்பனிய சநாதன தருமத்தை ஒழித்துக்கட்டி, ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்று நிலைநாட்டு வதற்கான போராட்டம்.

கேரளத்தில் தந்திரியாக நியமிக்கப்பட்டுள்ள யதுகிருஷ்ணா என்ற தலித் சமூகத்தை சேர்ந்த இளைஞருக்கு, பயிற்சியளித்த ஆசிரியரான அநிருத்தன் தந்திரி, ''பண்பாடு, நடத்தை, உணவு ஆகிய அனைத்தின்படியும் இனிமேல் யதுகிருஷ்ணா ஒரு பிராமணன். பிறப்பால் யாரும் பிராமணன் ஆவதில்லை. தனது செயல்களாலும், அறிவினாலும்தான் ஒருவன் பிராமணன் ஆகிறான்'' (Outlook, 7 oct, 2017) என்று கூறியிருக்கிறார்.

ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த யது கிருஷ்ணா அர்ச்சக ராகிருக்கிறார் என்பதற்காக நாம் மகிழ்ச்சியடையலாம். ''அவர் பிராமணன் ஆக்கப்பட்டிருக்கிறார்'' என்பதுதான் இதன் பொருள் என்றால் அதற்காக நாம் வெட்கப்பட வேண்டும். இந்தக் கூற்று, யது கிருஷ்ணா போன்றவர்களின் பிறவி இழிவினை மறைமுகமாக ஒப்புக்கொள்வதே ஆகும்.

''பிறப்பால் யாரும் பிராமணன் ஆவதில்லை'' என்ற சாமர்த்திய மான வாதம், சாதி ஏற்றத்தாழ்வை நியாயப்படுத்துவதற்காக, காலம் காலமாக துக்ளக் சோ முதலானவர்கள் அவிழ்த்து விடுகின்ற புளுகுமூட்டையாகும். பிறப்பினால்தான் சாதி தீர்மானிக்கப்படுகிறது என்பதே உண்மை. தமது பிறப்பின் காரணமாகத்தான் 206 மாணவர்கள் தெருவில் நிறுத்தப் பட்டிருக்கிறார்களேயன்றி, கருமவினை காரணமாக அல்ல. மரபு என்ற பெயரில் இந்தப் பார்ப்பனிய அநீதியை உச்ச நீதிமன்றமும் அங்கீகரிக்கிறது. இதுதான் உண்மை. இந்த உண்மையை உலகுக்கு உணர்த்தும் பொருட்டுத்தான் பெரியார் அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம் நடத்தினார்.

''அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்கு'' என்ற கோரிக்கை, மற்ற அரசுப் பணிகளில் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் வேலை கேட்கும் கோரிக்கையைப் போன்றதல்ல. அரசி யல் சட்டப் பிரிவுகள் 25, 26 ஆகியவையும், அவற்றுக்கு விளக்கமளிக்கும் உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளும், சாதி - தீண்டாமை முதல் பாலின ஒடுக்குமுறை வரையிலான பலவிதமான சமூக ஒடுக்குமுறைகளை நியாயப்படுத்துகின்றன என்ற உண்மையை மக்களுக்கு எடுத்துக்காட்டுவதே இந்தக் கோரிக்கையின் முதன்மையான நோக்கம்.

கருவறைக்குள்ளே நுழைய முடியாமல் நிற்கிறார்கள் நமது மாணவர்கள். ''கருவறை மட்டுமல்ல, கோயிலும் எங்களுக்குச் சொந்தம்'' என்ற தங்களது அடுத்த கோரிக்கையை எழுப்பி இருக்கிறது சங்க பரிவாரம். ''இந்து அறநிலையத்துறையையே அகற்ற வேண்டும்'' என்ற சுப்பிரமணியசாமியின் மனு உச்ச நீதிமன்றத்தில் இருக்கிறது. அறநிலையத் துறையிடமிருந்து தமிழக கோயில்களை மீட்கும் இயக்கத்துக்கு நிதி வசூல் செய்யவும் தொடங்கியிருக்கிறது சங்க பரிவாரம்.

பெற்ற உரிமைகள் அனைத்தையும் பறிகொடுக்கும் நிலை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம். தமிழகத்தையே தங்களுக்கு எழுதிக் கொடுக்கத் தயாராக இருக்கும் எட்டப்பர் கள் கையில் ஆட்சி இருப்பதால், காவிக்கும்பினி களிப்பில் மிதக்கிறது.

***கதவைத் தட்டுகிறது காட்டு மிராண்டிக் கூட்டம்...***
***தமிழகமே, விழித்துக்கொள்!***

**PRPC** **மக்கள் உரிமைப் பாதுகாப்பு மையம்**
சென்னை 90946 66320